# பெப்ரவரி – 01 – புதன்

**“உம் செயல்களின் பயனால் மாநிலம் நிறைவுறுகின்றது.”- திபா103:13**

---

## முதல் வாசகம்: எபிரேயர் 12 : 4 – 7,11 – 15

சகோதர சகோதரிகளே! பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை.தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்துவிட்டீர்கள் ”பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத்தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும் போது தளர்ந்து போகாதே. தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார் ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார். திருத்தப் படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ? இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சிக்குரியதாய் இராமல் துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால், பின்னர் இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும், நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர். எனவே ”தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள் தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்.””நீங்கள் நேர்மையான பாதையில் நடந்து செல்லுங்கள். ”அப்போதுதான் ஊனமாய்ப் போன கால்மூட்டு பிசகாமல் குணமடையும். அனைவருடனும் அமைதியாய் இருக்க முயலுங்கள் தூய்மையை நாடுங்கள். தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார். உங்களுள் எவரும் கடவுளின் அருளை இழந்து விடாமலிருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள். கசப்பான நச்சுவேர் எதுவும் உங்களுக்குள் முளைத்து தொல்லை கொடுக்காதபடியும் அதனால் பலர் கெட்டுப்போகாதபடியும் பார்த்துக் கொள்ளுங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சுவோர் மீது அவரது பேரன்பு நிலைத்திருக்கும்

## நற்செய்தி: மாற்கு 6:1- 6

அக்காலத்தில் ஆண்டவர் இயேசு தொழுகைகக்கூடத் தலைவரின் வீட்டிலிருந்து புறப்பட்டுத் தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.ஓய்வுநாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், ”இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?” என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயங்கினார்கள்.இயேசு அவர்களிடம், ”சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்” என்றார்.அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்ல செயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை.அவர்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார். அவர் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று கற்பித்துவந்தார்.

**தியானம்:** “இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே!” (மாற்கு6:2-3) இவ்வாறு தமது சொந்த ஊரிலேயே புறக்கணிக்கப்படும் இறைமகன் இயேசுவை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். இறைமகன் இயேசுவின் ஊரான நசரேத்தில் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் இதயத்தில் கடின உள்ள முடையவர்களாததால் கிறிஸ்துவை இன்னாரெண்று ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் என்று சொல்ல முடியாது. மாறாக, அவர்களும் எங்களைப் போன்ற சாதாரன வாழ்க்கை வாழ்ந்து நாளாந்தம் கிறிஸ்துவைப் பின்தொடர்ந்தவர்கள். ஆயினும், தமது இவ்வுலக அறிவுக்குத் தெரிந்தளவில் கிறிஸ்துவை எவரது குடும்பத்தில் பிறந்த மகனென் நன்கு அறிந்திருந்தார்கள். அதனாலேயே, எம்மைப் போன்று அன்று நசரேத்து ஊர் மக்களால் ஆவிக்குரிய விதத்தினில் இறைமகன் இயேசுவை யாரென அறிந்து கொள்ள முடியாதிருந்தது. அக்காலத்து நசரேத்தூர் மக்களைப் போன்றே நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம். தினசரி திருப்பலிக்குச் செல்கின்றோம். திருவிருந்தில் பங்குபெறுகிறோம். தினமும் பலதடவைகள் செபிக்கின்றோம். எனினும் கிறிஸ்துவை இறைவனின் திருமகன், எமது மெசியா, எமது இரட்சகர், எமது மீட்பர், எமது ஆண்டவர் என சரிவரப் புரிந்து ஏற்றுக்கொண்டு பகிரங்கமாக அறிக்கையிட்டு வாழுகின்றோமா? .இறைமகன் இயேசு எம்முன்னே தோன்றினால் எம்மால் அவரை இனம்காண முடியுமா? அன்று நசரேத்தூர் மக்களால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே இன்று எமது குடும்பங்களில் உடைந்த உறவுகளாக, தெருக்களில் பசியுற்று அலையும் அநாதைகளாக, வேலைத்தளயங்களில் திறமையற்ற உழைப்பாளியாக, மறைத்தளங்களிலும் சமுதாயத்திலும் மதிப்பற்ற, வசதி குறைந்தவர்களாகப் புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றார். எம்மோடு வாழும் கிறிஸ்துவை நாம் இனம் காணுவோமா?